## பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி – 2016

பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 05 ஆம் இலக்க பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி அதிகாரச்சட்டத்தின் 21 (2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பதவிநிலைக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2016 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 66,459,348 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு பிழைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மென்பொருள் முறைமையொன்றைக் கொள்வனவு செய்வதற்காக அதிகாரசபையால் பாதுகாப்பு அமைச்சுடன் ஒன்றிணைந்த நிறுவனமொன்றுக்கு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 4.5 மில்லியனான முழுப் பணத்தையும் முற்பணமாக கணக்கீடு செய்யாமல் மீளாய்வாண்டின் சொத்துக்கள் கொள்வனவாக கருதி மூலதனமாக்கப்பட்டிருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம் அந்நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு மாணவ உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக 2015 ஆம் ஆண்டில் பதவிநிலைக் கல்லூரிக்கு கிடைக்கப்பெற்ற ரூபா 10,645,740 தொகை அவ்வாண்டின் பிற்போடப்பட்ட வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அப்பணத்தைப் பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது ரூபா 381,000 பெறுமதியான மோட்டார் சைக்கிளொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 5,103,350 தொகை உத்தியோகத்தர்கள் வீடுகளை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டிற்காக அச்சொத்துக்களுக்குரிய ரூபா 178,267 தொகையான பெறுமானத்தேய்வு, காலக்கழிவாக கருதி வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 117,000 கிரயமான இரண்டு மோட்டார் சைக்கில்கள், ரூபா 160,000 கிரயமான முச்சக்கர வண்டியொன்று மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்களாக அகற்றப்பட்டிருந்த தளபாடங்கள், கணனிகள், மின் உபகரணங்கள் போன்ற 60 சொத்து விடயங்களின் கிரயம் மற்றும் அதனுடன் தொடர்பான பெறுமானத்தேய்வு அளவு கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கல்லூரிக்குச் சொந்தமில்லாத தரைப்படைக்கு மீண்டும் கையளிக்கப்பட்டிருந்த ரூபா 77,500 கிரயமான இரண்டு மோட்டார் சைக்கில்கள், கல்லூரியின் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) நன்கொடையாக தரைப்படையால் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருந்த டிராக்டர் டேலரும், நீர் பவுசரும் சொத்துக்களாக காணப்பட்ட போதிலும், அதன் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,323,809 ஆன நூலகப் புத்தகங்கள் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) இலங்கை தரைப்படையிடமிருந்து மீளாய்வாண்டின் போது எரிபொருள் மானியமாக கிடைத்த ரூபா 11,097,151 இற்குப் பதிலாக ரூபா 11,200,000 கணக்கீடு செய்யப்பட்டமையால் எரிபொருள் செலவினம் மற்றும் மானியம் ரூபா 102,849 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) பயன்படு ஆயுட்காலம் முடிவடைந்திருந்த தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக முன்னைய ஆண்டின் போது தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,401,072 தொகையான பெறுமானத்தேய்வினை சரிசெய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மின்சாரப் பட்டியலுக்காக செலுத்த வேண்டிய ரூபா 1,169,373 ஆன தாமதக் கட்டணங்கள் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, நிலையான சொத்துக்கள் பேரேடுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்காக மோட்டார் வாகனங்களின் பெறுமானத்தேய்வு ரூபா 1,480,000 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 909,467,108 ஆக இருந்த போதிலும், நிலையான சொத்துப் பதிவேட்டில் அப்பெறுமதி ரூபா 909,685,080 ஆக இருந்தமையால் ரூபா 217,972 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

### 2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

கல்லூரிக்கு எரிபொருள் வழங்கியமைக்காக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தரைப்படைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 10,992,853 ஆன கடன் மீதி நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அக்கடன் மீதியை தீர்ப்பதற்கு கல்லூரியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மை

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ / 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவு பாதீடு செய்யப்பட்ட வருமானச் செலவினக் கூற்று, பாதீடு செய்யப்பட்ட நிதி நிலைமைக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பன மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வவாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பதவிநிலைக் கல்லூரியின் நிதி விளைவுகள் ரூபா 5,665,356 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 15,135,983 மிகையாக இருந்தமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 20,801,338 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக கட்டணங்கள் அறவிடல் அடிப்படையில் எந்தவொரு வெளிநாட்டு மாணவ உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போது சமூகமளிக்காமை காரணமாக ஏனைய வருமானம் உழைக்கப்படாமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 6,410,036 ஆக காணப்பட்ட கல்லூரியின் பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டில் ரூபா 15,135,983 மிகையாக மாறியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது மீண்டும் ரூபா 5,665,356 பற்றாக்குறையாக இருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 21,827,028 ஆக காணப்பட்ட கல்லூரியின் பங்களிப்பு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 57,051,011 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 39,964,731 ஆக குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2008 இன் 5 ஆம் இலக்க பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் யுத்த தரைப்படை உத்தியோகத்தர்களுக்கு பொருத்தமான நியமனங்கள், பதவி உயர்வுகளுக்காக அவர்களுக்குத் தேவையான தொழில்துறை அறிவினை வழங்குதல் மற்றும் கல்லூரியில் பயிற்சி பெறும் உத்தியோகத்தர்களின் கட்டளை மற்றும் பதவிநிலை செயற்பாடு ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களில் ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்காக தயார்படுத்தல் கல்லூரியின் அடிப்படை நோக்கங்களாகும்.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

ஹெயியன்துடுவ இளைஞர் சேவை மன்றத்திற்குரிய 11 ஏக்கர் அளவிலான காணி 2011 ஆம் ஆண்டின் போது கல்லூரிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய சட்டபூர்வ உரித்தைக் கையேற்பதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பதவிநிலைக் கல்லூரியின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களில் பாதுகாப்பு அமைச்சிற்குரிய ரூபா 4,400,000 கிரயத்திலான பஸ் வண்டி மற்றும் தரைப் படையினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 28,275,000 பெறுமதியான ஏனைய 16 வாகனங்களை பதவிநிலைக் கல்லூரிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

2013 யூன் 05 ஆந் திகதிய பீசீஎம்டீ/பீஆர்/2013 ஆம் கடிதத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத அழிவடைந்து வரும் பழைய வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை கைதவிர்ப்பதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு அல்லது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்வதற்காக ஒருவல உருக்கு கூட்டுத்தாபனத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. பதவிநிலைக் கல்லூரிக்குச் சொந்தமான 2 மோட்டார் சைக்கில்கள் மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலம் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு பதவிநிலைக் கல்லூரி வளவில் நிறுத்தி வைக்கப்பட்டு சிதைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.4 பதவியணியினர் முகாமைத்துவம்

2012 இன் 13 ஆம் இலக்க அரச பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 22(2) ஆம் பிரிவின் பிரகாரம் கல்லூரியின் கணக்காளர் பதவிக்காக இலங்கை கணக்காளர் சேவையின் உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டில் வெற்றிடமாக இருந்த அப்பதவிக்கு 2017 ஆம் ஆண்டின் மார்ச் 31 வரையிலும் அச்சேவையின் உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பதவிநிலைக் கல்லூரியின் செயற்திறனான செயற்பாட்டிற்காக தேவையான பேராசிரியர் பதவி, விரிவுரையாளர் பதவி மற்றும் ஏனைய பதவிகள் ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கல்விசார் பதவியணிக்கு உயர் பதவிகளுக்காக நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.5 ஒப்பந்த செயற்பாடு

பொருட்களின் தரம் மற்றும் குணவியல்பு தொடர்பாக கருத்திற்கொள்ளாமலும் உடள்படிக்கையின் பிரகாரம் முறைப்படி குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படாதிருக்கையில் பதவிநிலைக் கல்லூரியின் உத்தியோகபூர்வ இல்ல கட்டிடத்திற்காக அலுமினியம் மற்றும் மரப்பகுதிகள் பொருத்துவதற்காக ஒப்பந்தக்காரருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 6,327,877 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இப்பொருட்களின் குணவியல்புகளைப் பரீட்சிப்பதற்காக நியமிக்கப்பட்ட கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரமும் அவை உரிய குணவியல்புகளையும் தரத்தினையும் கொண்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு 2017 மார்ச் 23 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2016 ஆம் ஆண்டில் பதவிநிலைக் கல்லூரியால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் கல்லூரியின் மூலதனச் செலவினம் மற்றும் நிலையான சொத்துக்களை கையேற்பதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்த்த செலவினங்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அச்சொத்துக்களை மாணவ உத்தியோகத்தர்களின் கல்வி நடவடிக்கைகளை பேணிச்செல்வது உட்பட ஏனைய பிரதான நோக்கங்களுக்குரியதாக பிரயோகிக்கக்கூடிய முறை தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

2012 இன் 13 ஆம் இலக்க பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 21(2) ஆம் பிரிவின் பிரகாரம் கல்லூரியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக நிரந்தர உள்ளகக் கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது பதவிநிலைக் கல்லூரியின் படைப்பிரிவின் நிறைவேற்றுனரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பெறுகை செயற்பாடு | i பொருட் கொள்வனவு தொடர்பாக பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை.<br>ii வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது விலை விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பெறுகை குழு அங்கீகாரம் கிடைத்த வழங்குனர் மற்றும் வாடகை உடன்படிக்கை எற்படுத்தப்பட்ட தரப்பினருக்கு இடையே வேறுபாடு காணப்பட்டமை. |
| (ஆ) உள்ளகக் கணக்காய்வு | முறையான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை. |
| (இ) கணக்கீடு | சொத்துக்கள் சரியாக இணங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கைஎடுக்காமை |